## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

## O.S. No. 177/2022

## 2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ஆம் தேதி திங்கட்கிழமை

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராக்கு | தபெ/கபெ |
| ஊர் | வட்டம் |
| சாதி | சமயம் |
| வயது | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டேன். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். தாவா சொத்துக்களுக்கு எனது தாத்தா பெரியாம்பிள்ளை பெயைல் தாக்கலான SLR ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 07.12.1968ம் தேதிய எனது தாத்தா பெரியாம்பிள்ளை மற்றும் அவரது மகன்கள் பாப்பாத்தியம்மளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஒத்தி ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.08.1970ம் தேதிய மேற்படி பாப்பாத்தியம்மாள் நடராஜபிள்ளைக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஒத்திமேடோவர் ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.05.1975ம் தேதிய எனது பெரியப்பா நாச்சிஅம்பலம், எனது அப்பா கருப்பணன் அம்பலம் எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 19.11.2008ம் தேதிய தாவா 1வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து எனது தந்தை எனக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 27.09.1999ம் தேதிய தாவா 2வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து எனது தந்தை எனக்கு எழுதிவைத்த இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.04.2014ம் தேதிய தாவா 2வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து நான் 2வது வாதிக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 18.03.2022ம் தேதிய தாவா 2வது அயிட்ட சொத்திற்கு 2வது வாதி பெயரில் ஏற்பட்ட

பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.04.2022ம் தேதிய O.S.69/2022 வழக்கின் பிராது சார்பு நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 30.09.2022ம் தேதிய O.S.69/2022 வழக்கில் நான் எதிர்கோருரிமை கோரி தாக்கல் செய்த எதிர்வழக்குரை அலுவலக நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 02.04.2008ம் தேதிய 1வது பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட மோசடியான இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.11.2022ம் தேதிய CSR No.529/2022 அசல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**